ஓம் சரவணஜோதியே நமோ நம

ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து

**ஆசான் அரங்கமகா ஞானியரின் பாதுகாப்பு அறிவுரை அருளாசி விளக்கம்**

03.04.2025

1. அருள் வடிவாக நின்று காத்தருளும்
ஆறுமுகப் பெருமானை தொழுதேற்றி
வரமென அரங்கமகா ஞானியர் யானும்
வழங்குவேன் ஓங்காரக்குடிலின் நிர்வாகத்தோடு

2. வகைபட தொண்டர் பெருமக்கட்கும்
வல்லமையான அன்னதான சேவைக்கும்
மிகைபட வந்து செல்கின்ற
உள்நாடு வெளிநாடு அன்பர் பெருமக்கட்கும்

3. பாதுகாப்போடு கூடிய அறிவுரை ஆசி விளக்கத்தை
வல்லமைபட அரங்கன் யானும் வழங்குவேன்
குரோதி ஆண்டு பங்குனி திங்களில்
வளர்பிறை சஷ்டி நன்னாள் தன்னில்

4. நாளதனில் அரங்கமகான் யானும்
நன்மை கருதியும் குடிலின் நிர்வாகத்தின்
சிறப்பு கருதியும் இனிதே
அருளாசி வழங்க வந்தேன்

5. ஆசி தந்தேன் என் பெருமக்களாம்
அரங்கன் என் தயவோடு
நாடெங்கிலும் துவங்கியுள்ள கிளைகளெல்லாம்
இந்தவித காலம் பலவாறு தனமுடக்கத்திலும்

6. பொருள் முடக்கத்திலும் இனம்புரியாத கலக்கத்திலும் இருக்க
இந்த கலக்கத்தை எல்லாம் நீக்கி
இவர்கட்கெல்லாம் பாதுகாப்பு தர வேண்டியே
அரங்கன் யான் அறிவுரை ஆசி வழங்க வந்தேன்

7. வந்ததொரு என் பூஜையை வலுவாக
வல்லமை கொண்டு கிளைச்சங்கங்கள் அத்துணையுமே
சிறப்பாக தொடர்ந்து செய்து வந்தால்
வந்திடும் சங்கங்கள் அத்துணையிலும்

8. வளமும் பொருளாதார பலமும்
வளமான தொண்டர்படை பெருமக்களையும்

பாதுகாப்புமிக்க செயல்பாடுகளையும் உருவாக்கி
அரங்கன் யான் அனைத்து கிளைச்சங்கங்களையும்

9. பாதுகாப்பேன் அவர்கள் சோர்வு கொள்ளாத வண்ணம்
கலக்கம் அடையாத வண்ணம் மீட்டு
அனைவருக்கும் தேகபலம் மனபலம்
சர்வபலம் கூட்டி அருள்புரிவேன்

10. அருளவே அரங்கன் என் பாதுகாப்பு
அனைத்து சங்கங்களுக்கும்
தலைமை பீடமாம் ஓங்காரக்குடிலுக்கும்
ஓங்காரக்குடிலின் நிர்வாகத்திற்கும்

11. உயர்வான குடிலின் அன்னதானத்தோடு
ஆங்காங்கே சங்கங்களில்
கிளை சங்கங்களில் நடக்கின்ற தர்மத்திற்கும்
அரங்கன் என் பரிபூரண பாதுகாப்பும் ஆசியும்

12. அனுகூலமும் உண்டு உண்டு
வகைபட இந்தவித காலம்
வல்லமை கொண்டு குருவார பூஜையாக
வையகத்தில் அரங்கன் என் தலைமைபீடத்தில் நடக்கின்ற

13. பூஜையும் ஏற்று மகிழ்ந்து
அரங்கன் யான் புன்னகை பட
என் அன்பர்களுக்கு ஆசியும்
அனுகூலமும் தந்து வருகின்றேன்

14. வருகவே குடிலின் தர்மம்
வல்லமை மிக்க குடிலின் அன்னதானம்
அருளமுதாகும் அருமருந்தாகும்
இந்த தடத்தை அணுகி உண்டு

15. என் நாமஜெபத்தை சொல்லி
உயர்வாக சைவநெறி கடைப்பிடிப்போரெல்லாம்
பிணி சோடை என்கின்ற
வினை தாக்கம் வழி

16. இன்னல் காணாத வண்ணம்
அவர்களெல்லாம் பாதுகாப்பு கொண்டு
இயல்பாக அவரவர்க்கு பற்றிய
பிணி வழி அணுகும் ஔஷத வழியிலேயே

17. பூரண குணம் கொண்டு
பூரண குணம் கண்டு அவர்களெல்லாம்
கடைத்தேற்றம் கொள்ள நேரும்
வல்லமை கொண்டு அரங்கன் யான்

18. வரமாக இன்று என் சீடர் ராம்குமார்
கரம்பட உலகோர்க்கு தீட்சையாகவும்
பல்வேறு ஆசியாகவும் தந்து
அருள் புரிய இருக்க ஓங்காரக்குடில் நோக்கி

19. உலக கிளைச்சங்கங்கள் அத்தனையும்
வந்தணுகி அருளாசி பெற்று தீட்சையும் ஏற்று
வல்லமைபட தர்மத்தில் உதவி நிற்கவே
அனைவருக்கும் சர்வ பாதுகாப்பும்

20. அகிலமெங்கும் பெரும்பாதுகாப்பும் அரங்கன்
யான் தந்து பேரருள் புரிவேன்
அரங்க மகான் யான் அருளிய
பாதுகாப்போடு கூடிய அறிவுரை ஆசி விளக்கம் முற்றும் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி